CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

## Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

### CHAPTER 2 - COMMUNITY RADIO THROUGH A GOVERNANCE LENS

SRUTHI CRS 90.8 MHz
Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# ENSURING TRANSAPARENCY

## சமுதாய வானொலி நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல்

CHAPTER 2
EPISODE 10

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்

- தகவல்களை எல்லோருக்கும் எடுத்துச் செல்ல அரசு மற்றும் அரசுத் துறைகள் சமுதாய வானொலி பயன்படுத்திக்கொள்கின்றன.
- சமுதாய வானொலியை பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களையும் அரசு எடுத்துச் செல்ல பயன்படுத்துகின்றது.
- செயல்முறைகளையும் வெளிப்படையாகவும் மற்றும் திறமையாகவும் நடைபெற மத்திய திட்டங்கள் கண்காணிப்பு அமைப்பு(Central Plan Schemes Monitoring System - CPSMS) உருவாக்கப்பட்டது.
- மத்திய திட்டங்கள் கண்காணிப்பு அமைப்பு (Central Plan Schemes Monitoring System - CPSMS) பொது நிதி மேலாண்மை அமைப்பு (Public Financial Management System - PFMS ) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# பொது நிதி மேலாண்மை அமைப்பு

- பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது இணைய வழி மென்பொருள் ஆகும்.
- பொது கணக்குகள் கட்டுப்பாட்டு அலுவலகம் இந்த மென்பொருளை உருவாக்கியுள்ளது.
- பொது நிதி மேலாண்மை அமைப்பு 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.
- பொது நிதி மேலாண்மை அமைப்பு மத்திய அரசின் திட்டமிடல் ஆணையத்தின் நிதி செலவினங்களை கண்காணிக்க பயன்படுத்தப்படுகிறது.
- செலவினங்களை உடனுக்குடன் பதிவு செய்வதற்கு இந்த மென்பொருள் உதவுகிறது.

# பொது நிதி மேலாண்மை அமைப்பு

- பொது நிதி மேலாண்மை வாயிலாக கணக்குகள் கணினி மயமாக்கப்பட்டது
- பொது நிதி மேலாண்மை அமைப்பு மத்திய அரசின் நிதி மேலாண்மைக்கு உதவுகிறது.
- பொது நிதி மேலாண்மை அமைப்பு உண்மையுள்ள, நம்பகமான, உடனுக்குடன் தகவல் பெற உதவுகிறது.
- அரசு முடிவு எடுப்பதற்கு இந்த தகவல் பயன்படுத்தப்படுகிறது.
- மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா ( DIGITAL INDIA) என்ற முயற்சியின் இது ஒரு அங்கமாகும்.

# பொது நிதி மேலாண்மை அமைப்பு

- பொது நிதி மேலாண்மை அமைப்பு Core Banking System (CBS) உடன் இணைக்கப்பட்டுள்ளது.
- பொது நிதி மேலாண்மை அமைப்பின் தனித்துவம் குறிப்பிட்ட நபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ அவர்களது வங்கி கணக்கில் நிதி வழங்கப்படுகிறது.
- பொதுத்துறை வங்கிகள், கிராமப்புற வங்கிகள் , தனியார் வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், இந்திய தபால் துறை, இந்திய ரிசர்வ் வங்கி ஆகிய வங்கிகளுடன் பொது நிதி மேலாண்மை அமைப்பு இணைக்கப்பட்டுள்ளது.
- அரசு சாரா நிறுவனங்கள்(NGO) மத்திய அரசு அல்லது அமைச்சகங்களில் இருந்து நிதி பெறுவதற்கு பொது நிதி மேலாண்மை அமைப்பு பயன்படுத்தப்படுகிறது.

# நிதி பெறும் வழிமுறைகள்

- அரசு சாரா நிறுவனங்கள் NITI Aayog இருந்து நிதி பெறுவதற்கு பொது நிதி மேலாண்மை அமைப்பில் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- நிதியை பெறுவதற்கு http://ngo-darpan.gov.in என்ற இணைய பக்கத்தில் சென்று தங்களின் தகவல்களை வழங்கி தங்களைப் பதிவு செய்ய வேண்டும்.
- பொது நிதி மேலாண்மை அமைப்பில் இருந்து நிதி பெறுவதற்கு இரு வழிமுறைகள் இருக்கின்றன:
    - மத்திய அரசின் நிதியை மட்டும் பெறுவதற்கு
    - மத்திய அரசு மற்றும் அனைவருடன் இருந்தும் நிதி பெறுவதற்கு( தங்களை சார்ந்த சான்றுகளைத் தர வேண்டும்)

# சமுதாய வானொலி நிதி உதவி திட்டம்

- சமுதாய வானொலி நிதி உதவி திட்டம் ( Community Radio Support Schemes) என்ற திட்டத்தின் மூலம் சமுதாய வானொலிக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு அரசு உதவுகிறது.
- சமுதாய வானொலி நிதி உதவி திட்டம் சமுதாய வானொலி இயங்குவதற்கு உதவுகிறது.
- தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது.
- சமுதாய வானொலி மற்றும் விருப்ப கடிதம் பெற்றவர்கள் (letter of intent) இதற்கு விண்ணப்பிக்கலாம்
- பின்தங்கிய மற்றும் கிராமப்புற பகுதிகளில் இருக்கும் சமுதாய வானொலி வளர்ச்சி பெறுவதற்கு இந்த திட்டம் உறுதுணையாக இருக்கிறது.

# நிதியை பயன்படுத்தும் நெறிமுறைகள்:

- **உபகரணங்கள் பெறுவதற்கான நிதி:**
- புதிய உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பழைய உபகரணங்களை மேம்படுத்தவும் இந்த நிதி வழங்கப்படுகிறது
- **பயிற்சி அளிப்பதற்கான நிதி:**
- இந்த நிதியைக் கொண்டு சமுதாய வானொலியில் இருப்பவர்களுக்கு நிகழ்ச்சியை உருவாக்க மற்றும் சமுதாய வானொலியை திறம்பட நடத்த பயிற்சி அளிக்கலாம்
- **அவசரகால நிதி:**
- புயல் நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரிடர்கள் பாதிப்பை ஏற்படுத்திய காலத்தில் சேதத்திலிருந்து மீள்வதற்கும் சாதனங்களை பழுது நீக்குவதற்கும் இந்த நிதி வழங்கப்படுகிறது

# நிதியை பயன்படுத்தும் நெறிமுறைகள்:

- **மேம்பாட்டு நிதி:**
- இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய வானொலி இருக்கின்ற சாதனங்களை மேம்படுத்தவும் விரிவாக்கம் செய்யவும் இந்த நிதி வழங்கப்படுகிறது
- **புதுமை நிதி:**
- சமுதாய வானொலி புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது நிகழ்ச்சிகளில் மற்றும் மேலாண்மையில் புதுமைகள் செய்வதற்காக இந்த நிதி வழங்கப்படுகிறது

# விவசாய தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனம்

- 2005 - 2006 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.
- மாநில அளவில் விவசாயிகளுக்கு உதவுவது தான் இதன் முக்கிய நோக்கமாகும்.
- நிதி மாநில நீட்டிப்பு வேலை (State Extension Work Plan - SEWP) திட்டத்தில் இருந்து வழங்கப்படுகிறது.
- தற்போது நாட்டில் 28 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்கள் 614 மாவட்டங்களிலும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- சமுதாய வானொலியை துவங்குவதற்கும் மற்றும் 3 ஆண்டுகள் விவசாயம் சார்ந்த நிகழ்ச்சிகளை வழங்கவும் உதவுகிறது.